**பல்லவபுரம் நகராட்சி மன்ற கூட்டம் எண் 09/2018–19 நகராட்சி ஆணையாளர் அறையில் 20.08.2018 அன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகள்:–**

**முன்னிலை :– க.சிவகுமார் எம்.ஏ.,**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**

## பொருள் எண் – 1

பல்லவபுரம் நகராட்சி ஆணையாளர் திரு.க.சிவகுமார், எம்.ஏ., அவர்களின் ஜீலை மற்றும் ஆகஸ்ட் 2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

## பொருள் எண் – 2

பல்லவபுரம் நகராட்சி பொறியாளர் திரு.எம்.கருப்பையா ராஜா அவர்களின் ஜீலை மற்றும் ஆகஸ்ட் 2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

## பொருள் எண் – 3

பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குள் ஜீலை மற்றும் ஆகஸ்ட் 2018 நிகழ்ந்த பிறப்பு மற்றும் இறப்பு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

பிறப்பு – 164 எண்ணிக்கை

இறப்பு – 39 எண்ணிக்கை

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

## பொருள் எண் – 4

பல்லவபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட பல்லாவரம், குரோம்பேட்டை பகுதிகளில் சிறுமின்விசை நீர்தேக்கத்தொட்டிகள், பூங்காக்கள், திறந்தவெளி கிணறுகள், கழிப்பிடங்கள் ஆகிய இடங்களில் Submersible, Compressor, Jet, Monoblock மோட்டார்கள் அமைத்து தண்ணீர் இறைக்கப்படுகிறது. அவற்றுள் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய வேண்டி உள்ளதால், மின் மோட்டார்களை வருடாந்திர பராமரிப்பு செய்ய 09.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு M/s குரு இன்ஜினியர்ஸ் என்ற நிறுவனத்திற்கு 10.03.2018ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூடுதலாக பல இடங்களில் சிறுமின்விசை நீர்தேக்கத்தொட்டிகள் (ம) பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளதால், ஏற்கனவே வழங்கப்பட்ட பராமரிப்பு செலவினத் தொகை கீழ்கண்டவாறு இந்நகரமன்ற தீர்மானம் எண்.532, நாள்.06.02.2018ல் செலவினம் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

| வ.எண் | பகுதி | தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பல்லாவரம் பகுதியில் மின்மோட்டார்கள் ஆண்டு பராமரிப்பு பணி | ரூ.9.80 |
| 2 | குரோம்பேட்டை பகுதியில் மின்மோட்டார்கள் ஆண்டு பராமரிப்பு பணி | ரூ.9.50 |

மேற்கண்ட செலவினம் முடிவுபெற்றதால் கூடுதலாக பல்லாவரம் பகுதியில் மின்மோட்டார்கள் ஆண்டு பராமரிப்பு பணிக்கு ரூ.9.80/- இலட்சத்திற்கும் மற்றும் குரோம்பேட்டை பகுதியில் மின்மோட்டார்கள் ஆண்டு பராமரிப்பு பணிக்கு ரூ.9.80/- இலட்சத்திற்கும் பராமரிப்பு செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் கருதி பணியின் அவசர அவசியம் கருதியும் கூடுதலாக மோட்டார்கள் இயங்கும் பகுதிகளில் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2537/2016/இ1

## பொருள் எண் – 5

பல்லவபுரம் நகராட்சிக்குட்பட்ட 42 வார்டுகளில் தினசரி சேகரமாகும் 104 மெட்ரிக் டன் அளவிலான குப்பைகளில் 50% மக்கும் தன்மையுள்ள உயிரி கழிவுகளை உருவாகும் இடத்திலேயே எருவாக்கம் செய்யும் வகையில், நகராட்சி பகுதிகளில் உரக்குடில்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. 24 இடங்களில் உயிரி கழிவுகளை உரமாக்கும் பணி துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்த உரக்குடில்களில், உணவு கழிவுகள், பழங்கள், காய்கறிகள் போன்ற கழிவுகளை இடுவதால், ஈக்கள் அதிகம் உள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு, உரக்குடில்கள் அமைந்துள்ள பகுதிகளில் ஈக்கள் இல்லாதவாறு பாதுகாக்க, ஈக்கள் ஒழிப்பு மருந்து தெளிக்க வேண்டியுள்ளதால் 100 லிட்டடா 'ஈ மருந்து' வாங்கிடவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000 இலட்சம் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி இச்செலவினம் மேற்கொள்ளலாம்.

ந.க.எண் 4274/2018/எச்1

## பொருள் எண் – 6

பல்லவபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, 12 மற்றும் 38 ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆழ்துளைக்கிணறுகள் தூர்ந்து போய் உள்ளதால், புதியதாக ஆழ்துளைகிணறு அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.50/- இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. இச்செலவீனம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 7

பல்லவபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உற்பத்தியாகும் எரியூட்ட தகுதியான கழிவுகளை அரியலூர் Ultra Tech Cement நிறுவனத்திற்கு எடுத்து செல்வதற்கு தனியார் வாகனம் பயன்படுத்தலுக்கு 02.07.2018ல் உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | M/s MJB Group of Services,<br>No.11/5, Hyder Garden,<br>Perambur, Chennai-600 012. | Rs.18,000/– |
| 2 | M/s K.B. Logistics,<br>No.17/37, Moore Street,<br>Chennai-600 001. | Rs.20,000/– |

மேற்கண்டவாறு நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் குறைவான விலைப்புள்ளி உள்ள வரிசை எண்.1ல் உள்ள நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

   ந.க.எண்.6643 /2017/எச்1

## பொருள் எண் – 8

பல்லவபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11, பச்சையம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள மழைநீர் கால்வாய் சேதமடைந்தும், பல இடங்களில் கால்வாய் இல்லாமலும் கழிவுநீர் சாலைகளில் தேங்குகிறது. எனவே, மேற்படி மழைநீர் கால்வாயினை புதியதாக அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவீனம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

   ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 9

பல்லவபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் வீடுகளில் சேகரிக்கப்படும் திரவ கழிவுகளை கொண்டு உரம் தயாரிப்பதற்காக Micro Compost Centres அமைக்க வார்டு எண்.11, திருவள்ளுவர் நகர், என்.எஸ்.கே தெருவில் பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. இச்செலவீனம் தூய்மை இந்தியா திட்ட நிதி அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 10

பல்லவபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட பல்லாவரம் - துரைபாக்கம் 200 அடி ரேடியல் சாலையில் 700 mm பம்பிங் மெயின் குழாய் செல்லும் இடத்தில் அமைந்துள்ள ஆள்நுழைவுவாயில்கள் சேதமடைந்துள்ளது. எனவே, தேன்மொழி நகர், கீழ்கட்டளை ஏரி, பிரியா சிமெண்ட் கோடவுன், DN திருமண மண்டபம், ஏசியன் அபார்ட்மெண்ட்ஸ் மற்றும் அலையன்ஸ் பிளாட்ஸ் ஆகிய இடங்களில் ஆள்நுழைவுவாயில்கள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவீனம் குடிநீர் நிதி அல்லது பாதாள சாக்கடை வைப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 11

பல்லவபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38, கக்கலஞ்சாவடி விரிவு பகுதியில் பாதாள பாதாள சாக்கடை புதியதாக அமைத்ததினால் சாலை மிகவும் சேதமடைந்து காணப்படுகிறது. எனவே, மேற்படி பகுதிக்கு தார் சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80/- இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. இச்செலவீனம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 12

பல்லவபுரம் நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கும் குடிநீர் லாரி வாகனம் வண்டி எண் TN22 AT 4664 பழுது நீக்கம் செய்து தகுதிச்சான்று புதுப்பிக்கும் பணிக்கு 11.07.2018 அன்று விலைப்புள்ளி கோரியத்தில் கீழ்காணும் விவரப்படி வரப்பபெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | M/s முருகன் சர்வீஸ் சென்டர்,<br>எண்.14, ராஜீவ் காந்தி நகர்,<br>1வது பிரதான சாலை,<br>தடான்குப்பம், வில்லிவாக்கம்,<br>சென்னை-49. | ரூ.1,47,500/- |

| | | |
|---|---|---|
| 2 | M/s ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மொபைல்ஸ்,<br>எண்.7, சாஸ்திரி நகர் ரோடு, ஆர்.வி.நகர் (P.O) கொடுங்கையூர், சென்னை-118. | ரூ.1,49,100/– |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1 ல் உள்ள M/s முருகன் சர்வீஸ் சென்டர் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொண்டமைக்கு அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3332/2017/இ2

## பொருள் எண் – 13

இந்நகராட்சியில் இயங்கி கொண்டிருக்கும் Bobcat (SKID STEER LOADER) இயந்திரத்தினை 2018-19ம் ஆண்டுக்கு M/s Marwell Enncon Tech (P) Ltd., மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவீனம் ரூ.1.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவீனம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.7322/2015/இ1

## பொருள் எண் – 14

பல்லவபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் மினி, டிப்பர் லாரி (407) TN 22 AA 2809 வாகனத்தை புதுப்பித்து தகுதி சான்று பெற வேண்டி, வாகனத்தின் பழுதுகளை நீக்கி புதுப்பிக்கும் பணிக்கு 12.07.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்ற பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s ஜெயசக்தி பாடி ஒர்க்ஸ்,<br>1/14, தண்டுரை ரோடு,<br>பணவேடு தோட்டம்,<br>பூந்தமல்லி, சென்னை – 59 | ரூ.98,700/– |
| 2 | M/s மகாசக்தி பாடி ஒர்க்ஸ்,<br>281, சீனிவாசா நகர், டிரங்க் ரோடு,<br>பூந்தமல்லி, சென்னை – 56 | ரூ.1,01,300/– |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி முடிக்கலாம்.
3. இச்செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

ந.க.எண் 4127/2018/எச்1

## பொருள் எண் – 15

பல்லவபுரம் நகராட்சியில் 2018-19ம் ஆண்டு பாதாள சாக்கடை வைப்பு நிதியின் கீழ் ரூ.11.50/- இலட்சத்திற்கு பாதாள சாக்கடை கழிவுநீர் பணிக்காக Desilting டாடா ஏஸ் வாகனத்துடன் கூடிய தூர்வாரும் இயந்திரம் விநியோகம் மேற்கொள்ளுதல் பணிக்கு 25.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை விவரம் |
|---|---|---|
| 1 | M/s Frontline Engineering Services,<br>No.22/45, Armenian Street,<br>1st Floor, Shop No.2,<br>Parrys, Chennai-600 001. | ரூ.11,24,786/- |
| 2 | M/s Empire Engineering & Services,<br>No.175/9, T.H. Road RS Jhavar Estate,<br>Tondiarpet, Chennai- 600 081. | ரூ.11,72,298/- |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த வரிசை எண்.1ல் காணும் **M/s Frontline Engineering Services** நிறுவனத்திற்கு பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்.513/2017/இ1

## பொருள் எண் – 16

பல்லவபுரம் நகராட்சி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2018-19ம் ஆண்டு நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள 20.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.16, திருவேங்கடமுடையான் தெருவில் சிறு உயர்மின் கோபுர விளக்கு வாங்கி பொருத்தும் பணி | 4.00 | M/s கிரீன் பீல்ட் சோலார் சொலுஷன் பிரைவெட் லிமிடெட் -0.50 % குறைவு<br><br>M/s எஸ் & பி அசோசியேட் +1.88 % அதிகம் | M/s கிரீன் பீல்ட் சோலார் சொலுஷன் பிரைவெட் லிமிடெட் -0.50 % குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | வார்டு எண்.13, கண்ணபிரான் தெரு (அம்பேத்கர் விளையாட்டு திடல் அருகில்) சிறு உயர்மின் கோபுர விளக்கு வாங்கி பொருத்தும் பணி | 4.00 | M/s கிரீன் பீல்ட் சோலார் சொலுஷன் பிரைவெட் லிமிடெட் -0.50 % குறைவு<br><br>M/s எஸ் & பி அசோசியேட் +1.88 % அதிகம் | M/s கிரீன் பீல்ட் சோலார் சொலுஷன் பிரைவெட் லிமிடெட் -0.50 % குறைவு |
| 3 | வார்டு எண்.11, கச்சேரிமலை குட்டை சந்திப்பில் சிறு உயர்மின் கோபுர விளக்கு வாங்கி பொருத்தும் பணி | 4.00 | M/s கிரீன் பீல்ட் சோலார் சொலுஷன் பிரைவெட் லிமிடெட் -0.50 % குறைவு<br><br>M/s எஸ் & பி அசோசியேட் +1.88 % அதிகம் | M/s கிரீன் பீல்ட் சோலார் சொலுஷன் பிரைவெட் லிமிடெட் -0.50 % குறைவு |
| 4 | வார்டு எண்.24, கிழக்கு புதுவை நகரில் சிறு உயர்மின் கோபுர விளக்கு வாங்கி பொருத்தும் பணி (மேம்பாலம் அருகில்) | 4.00 | M/s கிரீன் பீல்ட் சோலார் சொலுஷன் பிரைவெட் லிமிடெட் -0.50 % குறைவு<br><br>M/s எஸ் & பி அசோசியேட் +1.88 % அதிகம் | M/s கிரீன் பீல்ட் சோலார் சொலுஷன் பிரைவெட் லிமிடெட் -0.50 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

1. வரிசை எண்.1, 2, 3 மற்றும் 4க்கு பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அவற்றின் எதிரே குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
3. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2018–19ன் கீழ் செலவீனம் மேற்கொள்ளலாம்.

ந.க. எண்.2061/2017/இ1

## பொருள் எண் – 17

பல்லவபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு அகற்றும் TN 22 BE 9731 வாகனத்திற்கு தகுதி சான்று புதுப்பிக்க வேண்டி அதில் உள்ள பழுதுகளை சரி செய்து தர ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், கூடுதல் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்பி அனுமதி பெறவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.65/- இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.4792 /2018/எச்1

## பொருள் எண் – 18

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 விதி எண் 15ன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குபட்ட 200 அடி ரேடியல் சாலையில் அமைந்துள்ள சேதமடைந்த பாதாள சாக்கடை ஆள்நுழைவு குழிகளை மாற்றி அமைக்கும் பணிக்கு | திரு. K.ராஜேஷ் கண்ணன் | ரூ.8,26,900 |
| 2 | பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குபட்ட கீழ்கட்டளை பிரதான நீர் உந்து நிலையத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் துரைபாக்கம் ரேடியல் சாலையில் காமாட்சி மருத்துவமனை அருகிலும் (ம) டோயோடோ வாகன விற்பனை நிலையம் அருகிலும் கழிவுநீர் குழாய் உடைப்பை சீர் செய்யும் பணிக்கு | திரு. K.ராஜேஷ் கண்ணன் | ரூ.9,15,000 |
| 3 | பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குபட்ட வ.எண்.34, ராஜ ராஜேஸ்வரி நகர் சாலைக்கும் வார்டு எண்.20, ஹரிதாஸ்புரம் பிரதான சாலை சந்திப்பில் இனைக்கும் பிரதான கழிவுநீர் குழாய் உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் பிரதான குழாயில் கழிவுநீர் செல்லாமல் தடைபடுவதுடன் வார்டு எண்.32, 35 (ம) 36 ஆகிய பகுதிகளில் பிரதான கழிவுநீர் குழாய் உடைப்பினை சீர் செய்யும் பணிக்கு | திரு. K.ராஜேஷ் கண்ணன் | ரூ.6,38,000 |
| 4 | பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட ரேடியல் சாலை மற்றும் M.K.நகர் பிரதான சாலை சந்திப்பில் உள்ள சேதமடைந்த சிமெண்ட் குழாயினை மாற்றி DI குழாயாக மாற்றி அமைக்கும் பணிக்கு | திரு. K.ராஜேஷ் கண்ணன் | ரூ.11,79,800 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.2152/2016/இ1

## பொருள் எண் – 19

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 விதி எண் 15ன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | பொறியியல் பிரிவிற்கு மதிப்பீடுகள் மற்றும் அறிக்கைகள் தயார் செய்ய HP Laser Printer (All in one Model) இந்நகராட்சிக்கு விநியோகம் மேற்கொள்ளும் பணிக்கு | M/s இன்காம் சொலுஷன்ஸ் | ரூ.44,800 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள HDPE (சின்டெக்ஸ்) தொட்டிகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்து பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கு | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் | ரூ.1,16,400 |

| | | | |
|---|---|---|---|
| 3 | வார்டு எண்.19 திருப்போரூர் சாலை (பள்ளி அருகாமையில்), வார்டு எண்.20 திரு.வி.கா நகர் குறுக்கு தெரு (ம) கக்கன் தெரு, வார்டு எண்.24 லட்சுமி நகர் (வைஷ்ணவ கல்லூரி தெரு) ஆகிய பகுதிகளில் உள்ள பாதாள கழிவுநீர் குழாயின் உடைப்புகளை சீர் செய்யும் பணிக்கு | திரு.K.ராஜேஷ் கண்ணன் | ரூ.3,78,988 |
| 4 | பல்லவபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்ட ஆள்நுழைவுவாயில்கள் (ம) குழாய்களில் அடைப்புகளை கூடுதலாக பணியாளர்களை நியமித்து நீக்கம் செய்யும் பணிக்கு | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் | ரூ.1,97,637 |
| 5 | வார்டு எண்.3, காமராஜ் நகர், ஜி.எஸ்.டி ரோடு மேம்பாலம் (பாண்ட்ஸ் கம்பெனி சர்வீஸ் ரோடு) அருகில் உள்ள சாலையில் அமைந்துள்ள பாதாள சாக்கடை கழிவுநீர் குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளதால் பாதாள சாக்கடை கழிவுநீர் குழாயை மாற்றி அமைக்கும் பணிக்கு | திரு.K.கண்ணன் | ரூ.5,59,800 |
| 6 | காஞ்சிபுரம் மாவட்டம் திருவிடந்தையில் ஏப்ரல் 11 முதல் 14 வரை "Defence Expo 18" கண்காட்சி மற்றும் மாநாடு நடைபெறும் வளாகத்தில் இந்நகராட்சி சார்பாக திடக்கழிவு மேலாண்மை 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட 25 எண்ணம் காம்பாக்டர் தொட்டிகள் வைக்கும் பணிக்கு | M/s சக்தி பாடி ஒர்க்ஸ் | ரூ.7,37,500 |
| 7 | குரோம்பேட்டை பகுதியில் N.G.O காலனி, காயத்திரி நகர் (ம) நேரு நகர் ஆகிய பகுதிகளுக்கு பிரதான குடிநீர் குழாய் உடைப்பினை சரி செய்தல் பணிக்கு | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் | ரூ.2,98,480 |
| 8 | வார்டு எண்.34, M.D.L.B காலனி பகுதியில் சேதமடைந்த பாதாள கழிவுநீர் குழாயினை மாற்றி சீர் செய்யும் பணிக்கு | திரு.K.ராஜேஷ் கண்ணன் | ரூ.3,66,000 |
| 9 | வார்டு எண்.17, ஏ.ஜி.எஸ் காலனி, பவானி நகர், சுவாமி மலை நகர் ஆகிய பகுதிகளில் உள்ள சேதமடைந்த சாலைகளை Granular Subbase போட்டு சீர் செய்யும் பணிக்கு | M/s விலுக் இன்ஜினியரிங் | ரூ.6,00,000 |
| 10 | பல்லவபுரம் பெருநகராட்சிகுட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கழிப்பிடங்களுக்கு மராமத்து (ம) வர்ணம் பூசுதல் பணிக்கு | திரு.A.சுந்தரம் | ரூ.4,80,000 |
| 11 | பல்லவபுரம் பெருநகராட்சிகுட்பட்ட வார்டு எண்.18 மேட்டுத் தெரு, வ.எண்.20 திரு.வி.க தெரு, வ.எண்.22 ஆலமரத் தெரு, வ.எண்.23 கணபதிபுரம், வ.எண்.28 வ.உ.சி தெரு, வ.எண்.32 எம்.ஐ.டி கேட், வ.எண்.38 அன்னை இந்திரா நகர், வ.எண்.42 சி.எல்.சி லேன், கோதண்டம் நகர் - ஆகிய இடங்களில் அமைந்துள்ள கழிப்பிடங்களில் மராமத்து பணிகள் | திரு.V.குமார் | ரூ.4,79,900 |
| 12 | வார்டு எண்.34, வெங்கட்ராமன் நகர் முதல் பிரதான சாலை மற்றும் வார்டு எண்.20 ஹரிதாஸ்புரம் பிரதான சாலை சந்திப்பில் உள்ள திறந்தவெளி கிணற்றை சுற்றி தற்காலிகமாக G.I சீட் கொண்டு தடுப்பான் அமைக்கும் பணிக்கு மற்றும் வார்டு எண்.21, கிருஷ்ணா நகர் 3வது பிரதான சாலை (ம) வார்டு எண்.26 பாரதி தெரு, அம்மணி அம்மாள் தெரு (ம) வேலாயுதம் தெரு ஆகிய இடங்களில் மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிக்கும் | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் | ரூ.1,17,600 |
| 13 | தமிழகத்தின் வடகிழக்கு பருவமழையின்போது வீசிய ஒக்கி புயலினால் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ள | M/s ஷைன் | ரூ.67,200 |

| | | | |
|---|---|---|---|
| | சேதத்தினை புகைப்படம் மூலம் விளக்க அரேபியன் மாடல் ஸ்டால் இருக்கைகள் மற்றும் புகைப்படங்கள் அமைக்கும் பணிக்கு | எண்டர்பிரைசஸ் | |
| 14 | வார்டு எண்.11, தர்கா சாலையில் குடிநீர் குழாய் DI பைப் லைன் பதிக்கும் பணிக்கு | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் | ரூ.1,50,000 |
| 15 | வார்டு எண்.13, 16இ 17 (ம) 38 ஆகிய பகுதிகளில் சேதமடைந்த குடிநீர் குழாயினை மாற்றி அமைக்கும் பணி | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் | ரூ.3,60,000 |
| 16 | NULM திட்டத்தின் கட்டப்பட்டுள்ள இல்லத்திற்கு வீடு அற்றோர்க்கு தங்குபவர்களுக்கு தேவையான உபகாரணங்கள் வாங்குதல் பணிக்கு | M/s விலுக் இன்ஜினியரிங் | ரூ.2,08,000 |
| 17 | வார்டு எண்.18, பாத்திமா நகர் பிரதான சாலையில் செல்லும் பாதாள சாக்கடை கழிவுநீர் பிரதான குழாயில் கிருஷ்ணா தெருவில் உள்ள பாதாள சாக்கடை கழிவுநீர் குழாயினை இணைக்கும் பணிக்கு | திரு.K.ராஜேஷ் கண்ணன் | ரூ.1,20,000 |
| 18 | பழைய பல்லாவரம் நகராட்சி பள்ளி மற்றும் நம்ம டாய்லட் ஆகிய இடங்களில் புதியதாக குடிநீர் குழாய்கள் அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணிக்கு | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் | ரூ.2,00,000 |
| 19 | பல்லவபுரம் பெருநகராட்சிகுட்பட்ட பாதாள சாக்கடை பிரதான நீரேற்று நிலையித்தில பழுது ஏற்பட்டுள்ள கேபிள் மாற்றி அமைக்கும் பணி | M/s குரு இன்ஜினியர்ஸ் | ரூ.9,30,000 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.2152/2016/இ1

## பொருள் எண் – 20

பல்லவபுரம் நகராட்சியில் **2018–19**ம் ஆண்டு கல்வி நிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள **24.05.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| **கல்வி நிதி** | | | | |
| 1 | நகராட்சி ஜமீன் இராயப்பேட்டை மேல்நிலைப்பள்ளியில் மேஜை (ம) நாற்காலிகள் வாங்கி வழங்கும் பணி | 9.80 | M/s M.கௌரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டு தொகை<br><br>திரு.V.குமார் +1.03 % அதிகம் | M/s M.கௌரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டு தொகை |
| 2 | நகராட்சி அஸ்தினாபுரம் மேல்நிலைப்பள்ளியில் மேஜை (ம) நாற்காலிகள் வாங்கி வழங்கும் பணி | 9.80 | M/s M.கௌரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டு தொகை<br><br>திரு.V.குமார் +1.03 % அதிகம் | M/s M.கௌரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டு தொகை |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | நகராட்சி பொன்னியம்மன் மேல்நிலைப்பள்ளியில் மேஜை (ம) நாற்காலிகள் வாங்கி வழங்கும் பணி | 9.80 | M/s M.கௌரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டு தொகை<br><br>திரு.V.குமார் +1.03 % அதிகம் | M/s M.கௌரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டு தொகை |
| குடிநீர் நிதி | | | | |
| 4 | பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 3000 லிட்டர் கொள்ளவு கொண்ட HDPE தொட்டி அமைக்கும் பணி | 2.70 | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் -0.47% குறைவு<br><br>திரு.R.அரவிந்த் +0.38 % அதிகம் | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் -0.47% குறைவு |
| 5 | வார்டு எண்.18, நெமிலிச்சேரியில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி | 3.00 | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் -0.18% குறைவு<br><br>திரு.R.அரவிந்த் +0.05 % அதிகம் | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் -0.18% குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அவற்றின் எதிரே குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 21

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளும், பாதாள கழிவுநீர் திட்டப்பணிகளும் தற்போது நடைபெற்று வருவதால் வார்டு எண்.18ல் திருவள்ளுவர் தெரு மற்றும் ஒம் சக்தி நகர் 2வது தெருவில் உள்ள பேவர் பிளாக் சாலை பழுதடைந்துள்ளது. எனவே, ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலையினை சீரமைக்க ஆகும் திட்ட மதிப்பீடு ரூ.8.50/-இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 22

பல்லவபுரம் நகராட்சியில் 2018–19ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் (SBM) 2017-18 நிதியின் பணிகளை மேற்கொள்ள **03.08.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| **தூய்மை இந்தியா திட்ட நிதி** | | | | |
| 1 | வார்டு எண்.11, கச்சேரி மலையில் 5 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளை உரமாக்கிட பசுமை உரக்குடில் அமைத்தல் பணி | 40.00 | திரு.B.வித்யா +4.98 % அதிகம்<br>M/s பாஸ்கரன் நர்சரி +5.39 % அதிகம் | திரு.B.வித்யா +4.98 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அவற்றின் எதிரே குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. வரிசை எண்.1ல் உள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி 5% சதவிகிதத்திற்குள் உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
4. இச்செலவினத்தை தூய்மை இந்தியா திட்ட நிதி மற்றும் கூடுதல் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க. எண்.1621/2018/இ1

## பொருள் எண் – 23

பல்லவபுரம் நகராட்சியில் 2018–19ம் ஆண்டு பாதாள சாக்கடை வைப்பு நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள **25.07.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.16க்குட்பட்ட வேலுசாமி நகர் 2வது தெரு, வேலுசாமி நகர் 7வது தெரு, கலைவாணி நகர் பிரதான சாலை 1வது, 2வது மற்றும் 3வது, சுப்பிரமணியன் நகர் பிரதான சாலை 1 முதல் 5 வரை பகுதிகளுக்கு பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய் அமைத்தல் | 20.00 | திரு.K.ராஜேஷ் கண்ணன் மதிப்பீட்டுத் தொகை<br>திருமதி.K.ராஜம்மாள் +0.36 % அதிகம் | திரு.K.ராஜேஷ் கண்ணன் மதிப்பீட்டுத் தொகை |
| 2 | வார்டு எண்.17க்குட்பட்ட திருத்தனி நகர் 2வது பிரதான சாலை, பெருமாள் நகர் 7வது குறுக்கு தெரு, துரைசாமி சாலை 1வது தெரு, துரைசாமி சாலை 2வது தெரு, கணபதி நகர், பாரத் நகர் பிரதான சாலை, துரைசாமி நகர் பிரதான சாலை ஆகிய பகுதிகளுக்கு பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய் அமைத்தல் | 20.00 | திரு.K.ராஜேஷ் கண்ணன் மதிப்பீட்டுத் தொகை<br>திருமதி.K.ராஜம்மாள் +0.38 % அதிகம் | திரு.K.ராஜேஷ் கண்ணன் மதிப்பீட்டுத் தொகை |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வார்டு எண்.18க்குட்பட்ட அருள்முருகன் 1வது பிரதான சாலை, 1வது, 2வது குறுக்கு தெரு, கார்த்திக் கண்ணன் தெரு, அருள்முருகன் நகர், லேக் விங் அவென்யூ, ஸ்ரீ பாலாஜி அவென்யூ, ஏழுமலை அவென்யூ, கண்ணம்மாள் நகர் விரிவு, பூங்கா தெரு, குப்பு நாயக்கன் பேட்டை, எ.கே.துரைராஜ் சாலை, துரைசாமி நகர், ஸ்ரீ சாய் அவென்யூ மற்றும் கங்கையம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகளுக்கு பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய் அமைத்தல் | 25.00 | திரு.K.ராஜேஷ் கண்ணன் மதிப்பீட்டுத் தொகை<br><br>திருமதி.K.ராஜம்மாள் +0.37 % அதிகம் | திரு.K.ராஜேஷ் கண்ணன் மதிப்பீட்டுத் தொகை |
| 4 | வார்டு எண்.22க்குட்பட்ட மீரா தெரு, ஐஸ்வர்யா நகர், மகாத்மா காந்தி சாலை, பாலகிருஷ்ணன் நாயக்கர் தெரு, சுப்பிரமணியன் தெரு மற்றும் போஸ்டல் நகர், தனலட்சுமி நகர் விரிவு ஆகிய பகுதிகளுக்கு பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய் அமைத்தல் | 23.00 | திரு.K.ராஜேஷ் கண்ணன் மதிப்பீட்டுத் தொகை<br><br>திருமதி.K.ராஜம்மாள் +0.40 % அதிகம் | திரு.K.ராஜேஷ் கண்ணன் மதிப்பீட்டுத் தொகை |

**<u>அலுவலக குறிப்பு</u>**

மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அவற்றின் எதிரே குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க. எண்.4141/2017/இ1

## பொருள் எண் – 24

பல்லவபுரம் நகராட்சியில் பணிகள் மேற்கொண்டதில் ஒப்பந்ததாரர் சாய் எண்டர்பிரைசஸ் 2012 – 2013, ஆண்டுகளுக்கான பில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட EMD, தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். மேற்படி வைப்பு நிதி தொகையினை வழங்க மூன்றாண்டு காலத்திற்கு மேல் ஆகிவிட்டது. சாய் எண்டர்பிரைசஸ்க்கு தணிக்கை தடை ஏதுமில்லை. ஆகையால் மேற்படி அன்னாருக்கு தொகை ரூ.12,900/–யை வழங்கி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

வைப்பு தொகை பெறப்பட்டு மூன்றாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியால் மேற்படி தொகையினை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண்.2232/ 2018/பி2

## பொருள் எண் – 25

பல்லவபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடை இணைப்பு பெறுவதற்கு வார்டு எண்.12ல் கதவு எண்.15B, ஆர்.கே.வி அவென்யூ என்ற குடியிருப்புக்கு திருமதி.ஏ.ஜெயலட்சுமி என்ற பெயரில் பாதாள சாக்கடை வைப்புத்தொகை (செலுத்துச்சீட்டு எண்.903535, நாள்.05.01.2010ன்படி தொகை ரூ.5000 மற்றும் செலுத்துச்சீட்டு எண்.88845, நாள்.22.07.2014ன்படி தொகை ரூ.10,000/-) ஆக

மொத்தம் ரூ.15,000/- நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. பாதாள சாக்கடை வைப்புத்தொகை குடியிருப்பிற்கு ரூ.10,000/- போக மீதித்தொகை ரூ.5,000/-ஐ சாலை துண்டிப்பு கட்டணத்தில் ஈடு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பாதாள சாக்கடை வைப்புத் தொகையிலிருந்து ரூ.5,000/-ஐ வருவாய் நிதியில் சாலை துண்டிப்பு கட்டணத்தில் ஈடு செய்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க எண்.11280/2015/இ1

## பொருள் எண் – 26

பல்லவபுரம் நகராட்சி பகுதிக்குட்பட்ட அனைத்து வார்டுகளுக்கும் குறைந்த விலையில் உயர்தரம் வாய்ந்த குடிநீர் வழங்க வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் AVC (Automatic Vending Centres) அமைப்பதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை எண்.34/2018-19 மானியக் கோரிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-05 அவர்களால் 19.01.2018ல் அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி, 42 வார்டுகளிலும் 1 குடிநீர் சுத்திகரிக்கும் நிலையத்துடன் அமைக்கவும், இப்பணிகளை Public Private Partnership (PPP) Mode மூலம் DBFOT (Design, Build, Finance, Operate & Transfer) அடிப்படையில் பணியினை மேற்கொள்ள EOI (Expression of Interest) தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி அளிக்கலாம்.
2. தனியார் பங்களிப்பு மூலம் நவீன முறையில் தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரம் அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4112/2018/இ1

## பொருள் எண் – 27

அரசு ஆணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018 மற்றும் அரசு ஆணை எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018 – ல் 1.04.2018ம் தேதி முதல் சொத்து வரி சீராய்வு (Revision..2018 ) மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 16.08.2018ம் தேதிய சொத்து வரி சீராய்வு தொடர்பான ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின் படி சொத்து வரி சீராய்வு தொடர்பான நாளிதழ் விளம்பர அறிவிப்பு , மாஸ்டர் பதிவேடு ( Master Legdger ) தயார் செய்தல் உரிய சொத்து வரி சுய மதிப்பீட்டு படிவங்கள் அச்சடித்தல், நகல் எடுத்தல், மற்றும் சிறப்பு அறிவிக்கை ( Special Notice ) சொத்து வரி விதிப்புதாரர்களுக்கு கூரியர் மூலம் சார்வு செய்திடவும் மற்றும் இதர உத்தேச செலவினம் ரூ.12.00 இலசட்த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) வருவாய் நிதியிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5050/2018/அ1

## பொருள் எண் – 28

அரசு ஆணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018 ல் 1.04.2018 முதல் சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவிகிதத்திற்கு மிகாமலும் வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகமாலும் சொத்து வரி உயர்வு செய்திட அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில் அரசு ஆணை எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றம் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018 ல் ஏற்கனவே வழங்கப்பட்ட அரசாணையில் உத்திரவிடப்பட்ட வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு மட்டும் 100 சதவிகித்திற்கு மிகாமல் என்பதை தற்போது 50 சதவிகிதத்திற்கு மிகாமல் சொத்து வரி உயர்வு செய்திட திருத்திய உத்திரவு வழங்கி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின் விரபங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) பதிவு செய்யலாம்.
2) அரசாணையின் படி 1.04.2018 ம் தேதி முதல் சொத்து வரி சீராய்வு செய்திட அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5050/2018/அ1

## பொருள் எண் – 29

பல்லவபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு 2018–19 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் எழுது பொருட்கள் வாங்கிக்கொள்ள ரூ.5.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 503, நாள் 06.02.2018ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில் ரூ.4,04,693/– இலட்சத்திற்கு புத்தகங்கள் மற்றும் படிவங்கள் வாங்கப்பட்டுள்ளது. மீதித்தொகை ரூ.95,307/– மட்டுமே உள்ளது. மேலும் இந்த நிதியாண்டிற்கு (எட்டு மாதத்திற்கு) தேவைப்படும் புத்தகங்கள் மற்றும் படிவங்கள் தேவைப்பட்டால் வாங்கிக் கொள்ள கூடுதல் செலவுத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு ஏற்கனவே அளித்துள்ள விலை விகிதத்தில் அதே நிறுவனமான M/s. MMM எண்டர்பிரைசஸ், சென்னை 600 001 நிறுவனத்திடம் வாங்கிக்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதி வழங்கலாம்.

ந.க. எண். 495/2018/பி3

## பொருள் எண் – 30

பல்லவபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு 2018–19 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் புத்தகங்கள் மற்றும் படிவங்கள் வாங்கிக்கொள்ள ரூ.5.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண் 504, நாள் 06.02.2018ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில் ரூ.4,99,020/– இலட்சத்திற்கு புத்தகங்கள் மற்றும் படிவங்கள் வாங்கப்பட்டுள்ளது. மீதித்தொகை ரூ.980/– மட்டுமே உள்ளது. மேலும் இந்த நிதியாண்டிற்கு (எட்டு மாதத்திற்கு) தேவைப்படும் புத்தகங்கள் மற்றும் படிவங்கள் தேவைப்பட்டால் வாங்கிக் கொள்ள கூடுதல் செலவுத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு ஏற்கனவே அளித்துள்ள விலை விகிதத்தில் அதே நிறுவனமான M/s. MMM எண்டர்பிரைசஸ், சென்னை 600 001 நிறுவனத்திடம் வாங்கிக்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதி வழங்கலாம்.

ந.க. எண் 495/2018/பி3

## பொருள் எண் – 31

பல்லவபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு 2018–2019 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் கணினி உபகரணங்கள் வாங்கிக் கொள்ள ரூ.5.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண் 505, நாள் 06.02.2018ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில் ரூ.4,44,090 இலட்சத்திற்கு கணினி உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளது. மீதித்தொகை ரூ.55,910/– மட்டுமே உள்ளது. மேலும் இந்த நிதியாண்டிற்கு (எட்டு மாதத்திற்கு) தேவைப்படும் கணினி உபகரணங்கள் தேவைப்பட்டால் வாங்கிக் கொள்ள கூடுதல் செலவுத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு ஏற்கனவே அளித்துள்ள விலை விகிதத்தில் அதே நிறுவனமான M/s. MMM எண்டர்பிரைசஸ், சென்னை 600 001 நிறுவனத்திடம் வாங்கிக்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதி வழங்கலாம்.

ந.க. எண் 495/2018/பி3

## பொருள் எண் – 32

பல்லவபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு 2018–19 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் கணினி படிவங்கள் மற்றும் ரசீதுகளுக்கு வாங்கிக்கொள்ள ரூ.5.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண் 506, நாள் 06.02.2018ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில் ரூ.4,98,314/– இலட்சத்திற்கு புத்தகங்கள் மற்றும் படிவங்கள் வாங்கப்பட்டுள்ளது. மீதித்தொகை ரூ.1,686/– மட்டுமே உள்ளது. மேலும் இந்த நிதியாண்டிற்கு (எட்டு மாதத்திற்கு) தேவைப்படும் புத்தகங்கள் மற்றும் படிவங்கள் தேவைப்பட்டால் வாங்கிக் கொள்ள கூடுதல் செலவுத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு ஏற்கனவே அளித்துள்ள விலை விகிதத்தில் அதே நிறுவனமான M/s. MMM எண்டர்பிரைசஸ், சென்னை 600 001 நிறுவனத்திடம் வாங்கிக்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதி வழங்கலாம்.

ந.க. எண் 495/2018/பி3

## பொருள் எண் – 33

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பாதாள கழிவுநீர் திட்டத்தில் சேகரராகும் கழிவுநீர் அனைத்தும் பல்லாவரம் துரைபாக்கம் ரேடியல் சாலை ஒரமாக சுமார் 3.50 கிலோ மீட்டர் நீளம் சென்று கீழ்கட்டளை பிரதான கழிவுநீர் நிலையத்தை சென்றடைகின்றது. இதில் பல்லாவரம் துரைபாக்கம் ரேடியல் சாலை ஒரமாக அமைக்கப்பட்டுள்ள குழாயில் ஆள்நுழைவு குழிகள் சாலையின் ஒரமாக இருப்பதின் காரணமாகவும் மண் அரிப்பு ஏற்பட்டு ஆள்நுழைவு குழிகள் சேதமடைந்து உள்ளது. எனவே, சேதமடைந்து காணப்படும் 10 ஆள்நுழைவு குழிகள் புதியதாக கட்டமைக்க அதற்கான தோராய மதிப்பீடு ரூ.6.80/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் பாதாள சாக்கடை வைப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.2396/2018/இ3

## பொருள் எண் – 34

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள கழிவுநீர் திட்டம் தற்போது பயன்பாட்டில் இருந்து வருகின்றது. இத்திட்டத்தில் நகராட்சியில் உள்ள சாலைகளில் ஏற்படும் அடைப்புகளை நீக்க ஆள்நுழைவு குழிகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆள்நுழைவு குழிகள் நகராட்சியில் சாலைகளை சீரமைப்பதின் காரணமாகவும், சாலையில் கனரக வாகனங்களின் போக்குவரத்தின் காரணமாகவும் ஆள்நுழைவு குழிகள் சேதமடைந்து காணப்படுகிறது. சேதமடைந்த ஆள்நுழைவு குழிகள் சீர்செய்ய அதற்காகும் செலவினம் ரூ.9.80/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் பாதாள சாக்கடை வைப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.2396/2018/இ3

## பொருள் எண் – 35

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகரின் விடுப்பட்ட பகுதிகள் மற்றும் புதியதாக விரிவாக்கம் நகர் பகுதிகளிலும் பாதாள கழிவுநீர் பதிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. பாதாள கழிவுநீர் பிரதான குழாய்கள் பதிக்கும்போது நகராட்சியின் குடிநீர் பகிர்மான குழாய்கள் சேதமடைந்து குடிநீர் விநியோகம் தடைபடுவதால், வார்டு எண்.18, 27 மற்றும் 30 ஆகிய பகுதிகளில் சேதமடைந்த குழாய்கள் (ம) வால்வுகள் மாற்ற தோராய திட்ட மதிப்பீடு ரூ.2.50/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.2209/2018/இ2

## பொருள் எண் – 36

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அங்கு சேகரமாகும் கழிவுநீர் ஆங்காங்கே உள்ள கழிவுநீர் அகற்று நிலையங்களில் உள்ள மின் மோட்டார்கள் மூலம் கீழ்கட்டளை முதன்மை கழிவுநீர் அகற்று நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுப்படுகிறது. மேற்படி, கழிவுநீர் அகற்று நிலையங்களில் உள்ள கழிவுநீர் கிணறுகளில் கழிவுநீருடன் வண்டல் மண் மற்றும் கசடுகள் சேர்ந்துள்ளதால் கீழ்கண்ட நிலையங்களில் அவற்றை அகற்றும் பணி மேற்கொள்ள ரூ.9.80/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | கழிவுநீரகற்று நிலையம் | கிணறுகள் எண்ணம் |
|---|---|---|
| 1 | கீழ்க்கட்டளை முதன்மை கழிவுநீர் அகற்று நிலையம் | ஐந்து |
| 2 | நன்மங்கலம் துணைக்கழிவுநீரகற்று நிலையம் | ஐந்து |
| 3 | அருள்முருகன் நகர் கழிவுநீர் அகற்று நிலையம் | ஒன்று |
| 4 | இந்திரா நகர் கழிவுநீர் அகற்று நிலையம் | மூன்று |
| 5 | ராமசாமிக்குட்டை கழிவுநீர் அகற்று நிலையம் | மூன்று |
| 6 | பி.வி.வைத்தியலிங்கம் சாலை ஒர கழிவுநீர் அகற்று நிலையம் | ஒன்று |
| 7 | இராஜேந்திரா நகர் சாலை ஒர கழிவுநீர் அகற்று நிலையம் | ஒன்று |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் பாதாள சாக்கடை வைப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.2396/2018/இ3

## பொருள் எண் – 37

பல்லவபுரம் நகராட்சி, சென்னைக்கு மிக அருகாமையில் அமைந்துள்ள பெருநகராட்சி ஆகும். இந்நகராட்சியில் 2017ம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி 74,211 குடியிருப்புகளும், 4350 வணிக நிறுவனங்களும் அமைந்துள்ளது. திடக்கழிவு மேலாண்மை விதிகள் – 2016ன் படி ஒவ்வொரு குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், குடிசை பகுதிகள் மற்றும் இதர நிறுவனங்களில் உருவாகும் திடக்கழிவுகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை மற்றும் அபாயகரமான குப்பை என தரம் பிரித்து, குப்பை உருவாகும் இடத்திலேயே இறுதியாக்கம் செய்வது நகராட்சியின் கடமையாகும். மேற்கண்ட முதல் கட்ட சேகரம் செய்யும் பணிக்கு தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 502 ஆகும். இந்நகராட்சியில் 324 – துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில் தற்போது 294 – துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். எனவே நகரில் உள்ள அனைத்து பகுதிகளிலும் திடக்கழிவுகளை தினசரி பிரித்து சேகரம் செய்யும் பணிக்கு மேற்கொண்டு 232 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகிறது. மேற்கண்ட 232 பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் வெளிக்கொணர்வு மூலம் நியமனம் செய்து பணி மேற்கொள்ளவும், அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.348.00 இலட்சத்திற்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.55, நாள்.15.05.2018 அன்று அனுமதியின்படியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம் அவர்களின் கடித எண்.K.Dis.No.15795/P3/2018, நாள்.25.06.2018 அனுமதி அளிக்கப்பட்டு 12.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. உரிய ஒப்பந்தப்புள்ளிக்கு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் (ம) முகவரி | தொகை ரூ. (ஒரு நாள் தினக்கூலி) |
|---|---|---|
| 1 | M/s ஸ்ரீநிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவெட் லிமிடெட், எண்.33, 15வது அவென்யூ, அசோக் நகர், சென்னை-600 083. | ரூ.458/- |

| | | |
|---|---|---|
| 2 | தி வாலாஜாபாத் அக்ரோ இன்ஜினியரிங் (ம) சர்வீஸ் கோ.ஆப்.சென்டர், லிமிடெட், வாலாஜாபாத். | ரூ.461/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி விவரப்படி சந்தை விகிதம் (Market Rate 2017-18ன்படி ரூ.346/-க்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்த விலைவிகிதத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் ஒரு மாதத்திற்காகும் செலவில் E.S.I 4.75%, E.P.F 13.16%, Administrative Charges 10.00%, ஆயுள் காப்பீடு ஒரு நபருக்கு ரூ.500, Safety Equipments ஒரு நபருக்கு ரூ.3,500 மற்றும் Uniform ஒரு நபருக்கு ரூ.1200 ஆக மொத்தம் சேர்த்து ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது. எனவே, இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s ஸ்ரீநிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவெட் லிமிடெட், நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s ஸ்ரீநிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவெட் லிமிடெட், நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பொது சுகாதாரம் இயக்குதல் (ம) பராமரிப்பு செலவினத்தில் மேற்கொள்ளலாம்.

ந.க.எண் 6284/2017/எச்1

## பொருள் எண் – 38

பல்லவபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட பல்லாவரம் பகுதியில் கண்ணபிரான் தெரு, பாரதி நகர், கச்சேரி மலை, முனைவர் அவென்யூ, ஈஸ்வரி நகர், நியூ காலனி, சேம்பர்ஸ் காலனி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியத்தின் வாயிலாக குடிநீர் குழாய்கள் மூலமாக பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. குடிநீர் விநியோகத்திற்காக குழாய்கள் பதிக்கப்பட்டு பல ஆண்டுகளானதாலும், குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. மேலும், ஆங்காங்கே குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருகிறது. எனவே, பொதுமக்களுக்கு உடனடியாக அவைகளை சரி செய்ய வேண்டி உள்ளது. நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் சரி செய்யப்பட்டு வருகிறது. மேலும், தற்சமயம் பணியில் உள்ள ஒப்பந்ததாரரின் பணி தொகை நிறைவடைந்துவிட்டது. எனவே, அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரரின் பணிக்காலமும், தொகையும் நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்சமயது கோடைகாலமாக இருப்பதால் குடிநீர் வநியோக அவசியம் கருதி 01.07.2018 முதல் தற்சமயம் பணிபுரிந்து வரும் M/s ஷைன் எண்டர்பிரைசஸ் என்பவரைக் கொண்டு அவர் அளித்த ஒப்பந்தவிகிதத்தில் பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவீனம் ரூ.15.00 இலட்சத்திற்கு மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவீனம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.395/2017/இ1

## பொருள் எண் – 39

பல்லவபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட குரோம்பேட்டை பகுதியில் உள்ள சாந்தி நகர், இராதா நகர், N.G.O காலனி, காயத்திரி நகர் மற்றம் நேரு நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியத்தின் வாயிலாக குடிநீர் குழாய்கள் மூலமாக பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. குடிநீர் விநியோகத்திற்காக குழாய்கள் பதிக்கப்பட்டு பல ஆண்டுகளானதாலும், குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுகிறது. மேலும், ஆங்காங்கே குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருகிறது. எனவே, பொதுமக்களுக்கு உடனடியாக அவைகளை சரி செய்ய வேண்டி உள்ளது. நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் சரி செய்யப்பட்டு வருகிறது. மேலும், தற்சமயம் பணியில் உள்ள ஒப்பந்ததாரரின் பணி தொகை நிறைவடைந்துவிட்டது. எனவே, அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரரின் பணிக்காலமும், தொகையும் நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்சமயது கோடைகாலமாக இருப்பதால் குடிநீர் வநியோக அவசியம் கருதி 01.07.2018 முதல் தற்சமயம் பணிபுரிந்து வரும் M/s ஷைன் எண்டர்பிரைசஸ் என்பவரைக் கொண்டு அவர் அளித்த ஒப்பந்தவிகிதத்தில் பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவீனம் ரூ.15.00 இலட்சத்திற்கு மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவீனம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.395/2017/இ1

## பொருள் எண் – 40

பல்லவபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி குப்பை அகற்ற போதுமான வாகனம் இல்லாத காரணத்தினால் நகராட்சி பகுதிகளில் அதிகமான அளவு அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள் மற்றும் காலிமனைகள் விஸ்தரிப்பு இருப்பதால், தற்போது இந்நகராட்சியில் TATA ACE வாகனங்கள் 10 எண்ணிக்கை புதிதாக வாங்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்துள்ளதை தொடர்ந்து, மேற்கண்ட தனியார் மூலம் வாடகை அடிப்படையில் பயன்படுத்தி வந்த வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளது. எனவே திடக்கழிவு மேலாண்மை விதிகள், சேவை கட்டணம் மற்றும் உலர் கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் நகராட்சி வாகனங்கள் தகுதி சான்று பெறவேண்டிய காலத்திற்கு வாகனங்களை நிறுத்தி பணிமனையில் இருந்து திரும்பவரும் வரையில் ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் வாகனங்கள் அமர்த்தப்பட்டு வந்த அதே விலைவிகிதத்தில் அமர்த்திக்கொள்ள R.R.Service, கன்னிகாபுரம், செய்யூர் போஸ்ட், என்ற தனியார் நிறுவனத்திலிருந்து தேவைக்கேற்ப டிராக்டர் மற்றும் டிரெய்லர் வாகனங்களை வாடகை

ஒப்பந்த அடிப்படையில் 2018–19ம் வருடத்திற்கு அமர்த்திக்கொள்ளவும், ஏப்ரல் – 2018 முதல் ஜீலை 2018 வரை அவசர, அவசியம் கருதி டிராக்டர்கள் பயன்படுத்தியமைக்கு பின்னேற்பும் வேண்டி, அதற்கான தோராய செலவினம் ரூ.5.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர, அவசியம் கருதி ஏப்ரல் – 2018 முதல் ஜீலை 2018 வரை வாகனம் பயன்படுத்தியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.
3. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.

ந.க.எண். 1744/2018/எச்1

## பொருள் எண் – 41

பல்லவபுரம் நகராட்சி தூய்மை இந்தியா திட்ட நிதியில் ரூ.130.00 இலட்சம் மதிப்பீட்டில் பசுமை உரக்குடில் அமைக்கும் திட்டத்தில் அந்தந்த பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை பிரித்து உரமாக்கும் பணிக்கு தேவையான முதன்மை குப்பை சேகரிப்பு வாகனம் (TATA ACE including Body Building) 20 எண்ணிக்கை விநியோகம் மேற்கொள்ளும் பணிக்கு இருவகை உறை முறையில் 09.08.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 14.08.2018 அன்று விலைபுள்ளி திறக்கப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வரிசை எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் (ம) முகவரி | தொகை விவரம் |
|---|---|---|
| 1 | M/s Sakthi Body Works,<br>No.46, Poonamalee Bye Pass Road,<br>(Opp M.T.C Bus Depot),<br>Poonamallee, Chennai-600 056. | ரூ.1,29,78,000 |
| 2 | M/s Vambsk Fabs,<br>235-A, K.K.Pudur Road, Kovilamedu East,<br>Velandipalayam P.O.,Coimbatore-641 025. | ரூ.1,30,00,000 |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தபுள்ளிகள் தொழிற்நுட்ப அனைத்து தகுதிகளையும் பெற்று உள்ளது. எனவே மேற்காணும் பணிக்கு தகுதி பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகிதங்களின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த வரிசை எண்.1ல் காணும் **M/s. சக்தி பாடி ஒர்க்ஸ்** நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த வரிசை எண்.1ல் காணும் **M/s. சக்தி பாடி ஒர்க்ஸ்** நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இச்செலவினம் தூய்மை இந்தியா திட்ட நிதி மற்றும் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1621/2018/இ1

## பொருள் எண் – 42

பல்லவபுரம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு அவர்கள் பல்வேறு நல திட்டங்கள் குறித்து ஆய்வு கூட்டங்கள் நமது நகராட்சி கூட்ட அரங்கில் நடத்தினர். இதற்காக நகராட்சி கூட்ட அரங்கில் கூடுதலாக இருக்கைகள், மின் விசிறிகள், ஆகஸ்ட் 15 சுதந்திர தின விழாவின் போதும் 20.10.2018 அன்று ஏரிகள் புனரமைப்பது தொடர்பாக அப்பகுதி வாழ் மக்களைக்கொண்டு விழிப்புணர்வு கூட்டத்திற்கு ஒளிபெருக்கிகள் மற்றும் 21.08.2018 அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் வடகிழக்கு பருவமழை குறித்த ஆய்வு கூட்டத்திற்கு வண்ணப்படங்கள் கொண்ட ஆய்வறிக்கைகள் தயார் செய்த வகையில் ரூ.20,240/- திரு.தாமோதரன் அவர்களால் செலவிடப்பட்டது. மேற்படி, செலவிடப்பட்ட தொகை திரும்ப திரு.தாமோதரன் அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 43

பல்லவபுரம் நகராட்சியில் **2018–19** ஆம் ஆண்டு பொது நிதி, OSR நிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள **31.07.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| **பொது நிதி** | | | | |
| 1 | வார்டு எண்.28, பெரியார் நகர் விலங்குகள் கருத்தடை மையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 2.00 | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் -0.03 % குறைவு<br><br>திரு.R.அரவிந்த் +0.23 % அதிகம் | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் -0.03 % குறைவு |
| 2 | வார்டு எண்.15, கீழ்கட்டளை, கங்கா கார்டன் பகுதிக்கும் நகர்புற வசிப்பிடமற்றோர் இல்லத்தையும் இணைக்க சிறுபாலம் (ம) கால்வாய் அமைத்தல் | 9.80 | திரு.A.சுந்தர் -0.07 % குறைவு<br><br>திரு.V.குமார் +0.05 % அதிகம் | திரு.A.சுந்தர் -0.07 % குறைவு |
| **OSR நிதி** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வார்டு எண்.15 காசி விசாலாட்சிபுரம் (ம) வார்டு எண்.12 ஆர்.கே.வி அவென்யூ சில்வர் ஜுப்ளி ஆகிய பூங்காக்களை ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 9.80 | திரு.P.பன்னீர் செல்வம் மதிப்பீட்டுத் தொகை<br><br>M/s பாஸ்கரன் நர்சரி +1.81 % அதிகம் | திரு.P.பன்னீர் செல்வம் மதிப்பீட்டுத் தொகை |
| 4 | வார்டு எண்.13 சுபம் நகர் பகுதி III (ம) வார்டு எண்.17 பவானி நகர் ஆகிய பூங்காக்களை ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 9.80 | M/s பாஸ்கரன் நர்சரி மதிப்பீட்டுத் தொகை<br><br>M/s ராம் அசோசியேட்ஸ் +1.61 % அதிகம் | M/s பாஸ்கரன் நர்சரி மதிப்பீட்டுத் தொகை |
| 5 | வார்டு எண்.19, சரஸ்வதி காலனி (ம) மணிகண்டன் நகர் பகுதியில் உள்ள பூங்காவில் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 9.90 | திரு.P.பன்னீர் செல்வம் மதிப்பீட்டுத் தொகை<br><br>M/s பாஸ்கரன் நர்சரி +1.81 % அதிகம் | திரு.P.பன்னீர் செல்வம் மதிப்பீட்டுத் தொகை |
| **குடிநீர் நிதி** | | | | |
| 6 | நகராட்சி நீரேற்று நிலையங்களில் டிஜிட்டல் தொழில்நுட்பம் கொண்ட அளவுமானி கண்ணபிரான் கோயில் தெரு OHT, முனைவர் அவென்யூ OHTல் பொருத்துவதற்கு | 9.70 | M/s பாஸ்கரன் நர்சரி மதிப்பீட்டுத் தொகை<br><br>M/s ராம் அசோசியேட்ஸ் +0.08 % அதிகம் | M/s பாஸ்கரன் நர்சரி மதிப்பீட்டுத் தொகை |
| 7 | பல்லாவரம் பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் (250 LPH, 500 LPH) ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9.80 | திரு.P.பன்னீர் செல்வம் மதிப்பீட்டுத் தொகை<br><br>M/s பாஸ்கரன் நர்சரி +0.12 % அதிகம் | திரு.P.பன்னீர் செல்வம் மதிப்பீட்டுத் தொகை |
| 8 | குரோம்பேட்டை பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் (250 LPH, 500 LPH) ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9.80 | M/s பாஸ்கரன் நர்சரி மதிப்பீட்டுத் தொகை<br><br>M/s ராம் அசோசியேட்ஸ் +1.12 % அதிகம் | M/s பாஸ்கரன் நர்சரி மதிப்பீட்டுத் தொகை |

**அலுவலக குறிப்பு**

1. மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அவற்றின் எதிரே குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதி, OSR நிதி மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க. எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 44

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11, கபிலர் தெருவில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் குடிநீர் குழாய்கள் பதித்ததினால் சாலைகள் மிகவும் சேதமடைந்துள்ளது. எனவே, அச்சாலையை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. இச்செலவீனம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 45

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11, கம்பர் தெருவில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் குடிநீர் குழாய்கள் பதித்ததினால் சாலைகள் மிகவும் சேதமடைந்துள்ளது. எனவே, அச்சாலையை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.75/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. இச்செலவீனம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 46

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட வார்டுகளில் உள்ள கால்வாய்களில் மண் நிறைந்துள்ளதால் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் பொருட்டு அவசர அவசியம் கருதி கீழ்கண்டவாறு உரிய மதிப்பீட்டின்படி கால்வாய்களில் தூர்வாரி பணி மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | வார்டு | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 11 வரை | 7.00 |
| 2 | வார்டு எண்.1 2 முதல் 22 வரை | 5.00 |
| 3 | வார்டு எண்.23 முதல் 34 வரை | 7.00 |
| 4 | வார்டு எண்.35 முதல் 42 வரை | 5.00 |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. இச்செலவீனம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

**பொருள் எண் – 47**

பல்லவபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட பல்லாவரம், குரோம்பேட்டை பகுதிகளில் சிறுமின்விசை நீர்தேக்கத்தொட்டிகள், பூங்காக்கள், திறந்தவெளி கிணறுகள், கழிப்பிடங்கள் ஆகிய இடங்களில் Submersible, Compressor, Jet, Monoblock மோட்டார்கள் அமைத்து தண்ணீர் இறைக்கப்படுகிறது. அவற்றுள் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய வேண்டி உள்ளதால், மின் மோட்டார்களை வருடாந்திர பராமரிப்பு செய்ய **09.03.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு M/s குரு இன்ஜினியர்ஸ் என்ற நிறுவனத்திற்கு **10.03.2018**ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூடுதலாக பல இடங்களில் சிறுமின்விசை நீர்தேக்கத்தொட்டிகள் (ம) பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளதால், ஏற்கனவே வழங்கப்பட்ட பராமரிப்பு செலவினத் தொகை கீழ்கண்டவாறு இந்நகரமன்ற தீர்மானம் எண்.**532**, நாள்.**06.02.2018** ல் செலவினம் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

| **வ.எண்** | **பகுதி** | **தொகை ரூ. (இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | பூங்காக்கள், அங்கன்வாடி மையங்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மற்றும் அலுவலக கட்டிடங்களில் மின் மோட்டார்கள் ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ளும் பணி | ரூ.**9.80** |

மேற்கண்ட செலவினம் முடிவுபெற்றதால் பூங்காக்கள், அங்கன்வாடி மையங்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மற்றும் அலுவலக கட்டிடங்களில் மின் மோட்டார்கள் ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கு ரூ.**9.80**/- இலட்சத்திற்கு பராமரிப்பு செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் கருதி பணியின் அவசர அவசியம் கருதியும் கூடுதலாக மோட்டார்கள் இயங்கும் பகுதிகளில் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பராமரிப்பு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.**2537/2016**/இ1

**பொருள் எண் – 48**

பல்லவபுரம் நகராட்சியில் **2018–19** ஆம் ஆண்டு பொது நிதி, OSR நிதி மற்றும் குடிநீர் நிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள **31.07.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| **மறு ஒப்பந்தப்புள்ளி** | | | | |
| 1 | வார்டு எண்.12, பி.வி வைத்தியலிங்கம் அருகில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மைய (ICDS) கட்டிடத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்து (ம) கூடுதல் வசதிகள் செய்தல் | 5.00 | திருமதி.B.வித்யா -0.02 % குறைவு<br>M/s கௌரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் +0.09 % அதிகம் | திருமதி.B.வித்யா -0.02 % குறைவு |
| **OSR நிதி** | | | | |
| 2 | வார்டு எண்.36, நல்லப்பா தெருவில் உள்ள பூங்காவை பராமரிக்க தண்ணீர் வசதி செய்தல் | 0.40 | திரு.P.பன்னீர் செல்வம் மதிப்பீட்டுத் தொகை<br>M/s பாஸ்கரன் நர்சரி +21.17 % அதிகம் | திரு.P.பன்னீர் செல்வம் மதிப்பீட்டுத் தொகை |
| 3 | வார்டு எண்.33, கஜலட்சுமி நகர் பகுதியில் உள்ள பூங்காவில் கூடுதல் வசதிகள் செய்தல் | 2.50 | திரு.P.பன்னீர் செல்வம் மதிப்பீட்டுத் தொகை<br>M/s பாஸ்கரன் நர்சரி +4.97 % அதிகம் | திரு.P.பன்னீர் செல்வம் மதிப்பீட்டுத் தொகை |
| 4 | வார்டு எண்.19, மணிகண்டன் நகர் பகுதியில் உள்ள பூங்காவில் கூடுதல் வசதிகள் செய்தல் | 4.75 | M/s பாஸ்கரன் நர்சரி மதிப்பீட்டுத் தொகை<br>திரு.P.பன்னீர் செல்வம் +0.14 % அதிகம் | M/s பாஸ்கரன் நர்சரி மதிப்பீட்டுத் தொகை |
| 5 | வார்டு எண்.13 சுபம் நகர் பகுதி III பூங்காவில் பெயர் பலகை, சிறுபாலம் மற்றும் இதர வசதிகள் செய்தல் | 6.00 | M/s பாஸ்கரன் நர்சரி மதிப்பீட்டுத் தொகை<br>திரு.P.பன்னீர் செல்வம் +0.01 % அதிகம் | M/s பாஸ்கரன் நர்சரி மதிப்பீட்டுத் தொகை |
| 6 | வார்டு எண்.19, சரஸ்வதி காலனி பூங்காவில் ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | 6.50 | M/s பாஸ்கரன் நர்சரி மதிப்பீட்டுத் தொகை<br>திரு.P.பன்னீர் செல்வம் +1.04 % அதிகம் | M/s பாஸ்கரன் நர்சரி மதிப்பீட்டுத் தொகை |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | வார்டு எண்.12, ஆர்.கே.வி அவென்யூ சில்வர் ஜூப்ளி பூங்காவில் வர்ணம் அடித்தல் (ம) விளையாட்டு உபகரணங்கள் அமைத்தல் | 8.00 | திரு.P.பன்னீர் செல்வம் மதிப்பீட்டுத் தொகை<br>M/s பாஸ்கரன் நர்சரி +0.28 % அதிகம் | திரு.P.பன்னீர் செல்வம் மதிப்பீட்டுத் தொகை |
| 8 | வார்டு எண்.13 சுபம் நகர் பகுதி III பூங்காவில் கூடுதல் வசதிகள் செய்தல் | 9.75 | M/s பாஸ்கரன் நர்சரி மதிப்பீட்டுத் தொகை<br>திரு.P.பன்னீர் செல்வம் +0.04 % அதிகம் | M/s பாஸ்கரன் நர்சரி மதிப்பீட்டுத் தொகை |
| **குடிநீர் நிதி** | | | | |
| 9 | இந்நகராட்சிக்கு சொந்தமான 12 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வால்வுகள் உள்ள இடத்தில் வால்வு பிட் அமைத்தல் | 9.80 | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் -0.03 % குறைவு<br>திரு.R.அரவிந்த் +1.09 % அதிகம் | M/s ஷைன் எண்டர்பிரைசஸ் -0.03 % குறைவு |

<u>**அலுவலக குறிப்பு**</u>

1. மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அவற்றின் எதிரே குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதி, OSR நிதி மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க. எண்.1652/2017/இ1

**பொருள் எண் – 49**

பல்லவபுரம் நகராட்சியில் **2018–19** ஆம் ஆண்டு பொது நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள **02.08.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| **பொது நிதி** | | | | |
| 1 | வார்டு எண்.8, சுந்தரேசன் தெரு, சுகாதார பிரிவு வார்டு அலுவலகத்தை பராமரிக்கும் பணி | 4.50 | திரு.V.குமார் -0.60 % குறைவு<br>திரு.R.அரவிந்த் +0.06 % அதிகம் | திரு.V.குமார் -0.60 % குறைவு |
| 2 | திடக்கழிவு மேலாண்மை பணிக்காக தானியங்கி பண்டல் போடும் (Automatic Bailing Press with auto bale tile) இயந்திரம் வநியோகம் செய்தல் | 7.00 | திருமதி.K.ராஜம்மாள் மதிப்பீட்டுத்தொகை<br>திரு.K.ராஜேஷ்கண்ணன் +0.96 % அதிகம் | திருமதி.K.ராஜம்மாள் மதிப்பீட்டுத்தொகை |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வார்டு எண்.19, மணிகண்டன் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.00 | திரு.A.சுந்தரம்<br>-0.03 % குறைவு<br><br>திரு.V.குமார்<br>+0.35 % அதிகம் | திரு.A.சுந்தரம்<br>-0.03 % குறைவு |
| 4 | இந்நகராட்சியில் பொது பிரிவு, வருவாய் பிரிவு (ம) பொறியியல் பிரிவு கணினிகளுக்கு 10KVA, 5 KVA (ம) 3 KVA Online UPS அமைக்கும் பணி | 9.60 | M/s குரு இன்ஜினியர்ஸ்<br>மதிப்பீட்டுத்தொகை<br><br>M/s மனோ எலக்ட்ரிக்கல்ஸ்<br>+0.07 % அதிகம் | M/s குரு இன்ஜினியர்ஸ்<br>மதிப்பீட்டுத்தொகை |
| குடிநீர் நிதி | | | | |
| 5 | வார்டு எண்.6, ஈஸ்வரி நகர், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியை பராமரிக்கும் பணி செய்தல் | 5.00 | M/s ஷைன் எண்டர்பிரைசஸ்<br>-0.62 % குறைவு<br><br>திரு.R.அரவிந்த்<br>+0.73 % அதிகம் | M/s ஷைன் எண்டர்பிரைசஸ்<br>-0.62 % குறைவு |
| கல்வி நிதி | | | | |
| 6 | வார்டு எண்.19, அஸ்தினாபுரம் நகராட்சி பள்ளியில் சூரியசக்தி (சோலார்) பேனல்போர்டு மாற்றி அமைக்கும் பணி செய்தல் | 6.00 | ஜே2வி இன்ஜினியரிங் சொலுஷன்ஸ்<br>மதிப்பீட்டுத்தொகை<br><br>திரு.J.குமரன்<br>+0.01 % அதிகம் | ஜே2வி இன்ஜினியரிங் சொலுஷன்ஸ்<br>மதிப்பீட்டுத்தொகை |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அவற்றின் எதிரே குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க. எண்.1652/2017/இ1

**பல்லவபுரம் நகராட்சி மன்ற கூட்டம் எண் 10/2018–19 நகராட்சி ஆணையாளர் (பொ) அறையில் 30.08.2018 அன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்டத்தின் நடவடிக்கைகள்:–**

**முன்னிலை :– திரு.மு.கருப்பையா ராஜா,**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் (பொ)**

## பொருள் எண் – 1

உயிரியல் பல்வகைமை (The Biological Diversity) சட்டம் 2002 மற்றும் தமிழ்நாடு உயிரியல் பல்வகைமை விதிகள் 2017ன்படி , இந்நகராட்சிக்குட்பட்ட உறுப்பினர்களை தேர்வு செய்து குழு உறுப்பினர்கள் (Biodiversity Management Committee) அமைத்திடல் குறித்து அரசாணை எண்.G.O (MS) No.137 Environmental and Forests (FR.5) Department Dated.09.11.2017ன்படி கீழ்கண்டவாறு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>உறுப்பினர்கள்</u>**

1. திருமதி.விமலா ராஜேந்திரன், குரோம்பேட்டை.
2. திருமதி.P.ரேவதி, நெமிலிச்சேரி.
3. திரு.சந்தானம், குரோம்பேட்டை.
4. திரு.கிருஷ்ணமூர்த்தி, குரோம்பேட்டை.
5. திரு.அசோக், பல்லாவரம்.
6. திரு.கார்த்திராஜா, பல்லாவரம்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

ந.க.எண்.5753/2018/இ1